# "ஒரே ஞானஸ்நானம்"

*"ஒரே ஞானஸ்நானம்" உள்ளது என்று பவுல் எழுதினார் (எபே. 4:5). இந்த "ஒரே ஞானஸ்நானம்" என்ற தகுதியுடையதாகக் கருதப்படும் இரு ஞானஸ்நானங்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானமும் மற்றும் தண்ணீரினால் ஞானஸ்நானமும் ஆகும். இரு ஞானஸ்நானங்களுக்கும் இடையில் ஒரு ஒப்பீட்டை ஏற்படுத்துவதன் மூலம் நாம், எபேசியருக்குப் பவுல் இந்த நிருபத்தை எழுதும்போது அமலில் இருந்ததும் தொடர்ந்து வரும் நூற்றாண்டுகளில் உலக நாடுகள் முழுவதிலும் தொடர்ந்து இருப்பதுமான "ஒரே ஞானஸ்நானம்" எது என்று நாம் தீர்மானம் செய்ய முடியும். பின்வரும் கேள்விகளுக்கான பதில்கள் ஒரு முடிவெடுக்க நமக்கு உதவும்:*

*1. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைக் கொடுத்தது யார்? மற்றும் தண்ணீர் ஞானஸ்நானத்தைக் கொடுத்தது யார்?*

யோவான், தனக்குப் பின் வருகிற ஒருவர் - இயேசு - பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானம் கொடுப்பார் என்று எடுத்துரைத்தார் (மத். 3:11). சகல இனங்களுக்கும் ஞானஸ்நானம் கொடுப்பதன் மூலம் அவர்களைத் தம் சீடராக்கும்படியாக இயேசு தம்முடைய சீஷர்களுக்குக் கூறினார் (மத். 28:19). மனிதரால் தரப்படும் ஞானஸ்நானம் எதுவும் தண்ணீர் ஞானஸ்நானமாகவே உள்ளது, ஏனெனில் மனிதர் பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு ஞானஸ்நானம் தரவில்லை மற்றும் தரவும் முடியாது. மேலும், இயேசு தண்ணீர் ஞானஸ்நானம் தரவில்லை (யோவா. 4:2); இயேசுவால் தரப்பட்ட ஞானஸ்நானம் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானமாகவே இருந்தது.

*2. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தை யார் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தது? மற்றும் தண்ணீர் ஞானஸ்நானத்தை யார் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தது?*

பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே வாக்களிக்கப்பட்டிருந்தது. அப். 1:2-5ல் வரும் பெயர்ச் சொற்களைக் கருத்தில் கொண்டு கவனிக்கும் பொழுது, இயேசு அவ்வசனப் பகுதிகளில் அப்போஸ்தலர்களைப் பற்றியே பேசினார் என்று காணப்பட முடியும். இயேசு "அப்போஸ்தலர்கள்" வசம் கட்டளைகளைக்

கொடுத்திருந்தார் (வ. 2). "இவர்களுக்கு" அவர் தம்மை உயிருள்ளவராகக் காண்பித்து, "இவர்களுக்கு" நாற்பது நாளளவும் தரிசனமாகி (வ. 3), மற்றும் "அவர்களை" ஒன்றுகூட்டி, பிதாவானவர் வாக்குத்தத்தம் செய்ததைப் பெறும் வரையிலும் "அவர்கள்" - அப்போஸ்தலர்கள் - காத்திருக்கும்படி கட்டளையிட்டு (வ. 4), மற்றும் "நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்" (வ. 5) என்றும் கூறினார்.

முன்னதாகவே, கடைசி இராப்போஜனத்தின் போது (யோவா. 13:2, 4), இயேசு தம் அப்போஸ்தலர்களிடம் தனிப்பட்ட விதத்தில் பேசியிருந்தார் (மத். 26:20; லூக். 22:14). அவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் அருளப்படுவார் என்று அவர் வாக்குத்தத்தம் செய்திருந்தார். ஆவியானவர் அவர்களுக்கு எல்லாவற்றையும் போதித்து, இயேசு கூறியிருந்த எல்லா வற்றையும் அவர்களுடைய நினைவுக்குக் கொண்டு வந்து, மற்றும் அவர்களைச் சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்துவார் (யோவா. 14:25, 26; 15:26; 16:12, 13).

பெந்தெகொஸ்தே நாளன்று அப்போஸ்தலர்களே பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டவர்களாய் இருந்தனர். அப். 1:26ல் கடைசியாகக் குறிப்பிடப்பட்டவர்களும், இவ்விதமாக அப். 2:1ல் ''அவர்கள்'' எனப்படுபவர்களும் அப்போஸ்தலர்களே ஆவார்கள். மேலும் மக்களின் முன்பு நின்று உரையாற்றியவர்கள் இந்த அப்போஸ்தலர்களே ஆவர் (அப். 2:14). மக்கள் கூட்டத்தார் தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று அப்போஸ்தலர்களிடம்தான் கேட்டார்கள் (அப். 2:6, 37).

பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் அப்போஸ்தலர்களுக்கு மட்டும் உரியதாயிருந்தது என்றாலும், தேவன் புற இனத்தாரிலிருந்து முதல் முதல் கிறிஸ்தவர்களானவர்கள் மீது பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை அருளியதென்ற ஒரு விதி விலக்கையும் ஏற்படுத்தினார். இது, தேவன் புற இனத்தாரை - இரண்டாந்தரக் கிறிஸ்தவர்களாக அல்ல ஆனால் யூதக் கிறிஸ்தவர்களுடன் சம அந்தஸ்தில் - ஏற்றுக் கொள்வார் என்பதைக் காண்பித்தது (அப். 11:15-17). அப்போஸ்தலர்கள் மற்றும் கொர்னேலியு மற்றும் அவரது குடும்பத்தார் மற்றும் நண்பர்கள் ஆகியோர் மட்டுமே பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் பெற்றதாக வேத வசனங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பவுலும் பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ் நானம் பெற்றார் என்று நாம் யூகம் செய்யலாம், ஏனென்றால் அவர், "மகா பிரதான அப்போஸ்தலருக்கும் நான் எவ்வளவும் குறைந்தவனாயிராத படியால்" (2 கொரி. 12:11) என்று கூறினார்.

தண்ணீர் ஞானஸ்நானம் எல்லா நாடுகளிலுள்ளவர்களுக்கும் மற்றும் சிருஷ்டிகள் முழுவதற்குமானது என்று இயேசு எடுத்துரைத்தார் (மத். 28:19; மாற். 16:15, 16). சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்ட எல்லா இடங்களிலும் மக்கள் தண்ணீர் ஞானஸ்நானமே பெற்றனர் (அப். 2:41; 8:12, 38, 39; 9:18; 10:47, 48; 16:15, 33; 19:5), ஆனால் அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் பெறவில்லை. பேதுருவின் எழுத்தும் (1 பேது. 3:21) மற்றும் பவுலின் நிருபங்களும், எல்லாக் கிறிஸ்தவர்களும் தண்ணீர் ஞானஸ் நானத்தை மட்டுமே பெற்றிருந்தனர் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன

(ரோமர் 6:3, 4; 1 கொரி. 1:13; கலா. 3:27; கொலோ. 2:12).

*3. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் எவ்விதம் தரப்பட்டது? மற்றும் தண்ணீர் ஞானஸ்நானம் எவ்விதம் தரப்பட்டது?*

அப்போஸ்தலர்கள் மீதும், புற இனத்திலிருந்து முதல் முதலாய் மனம் மாறியவர்கள் மீதும் பரிசுத்த ஆவியைப் பொழிந்தருளிய கர்த்தரால் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் தரப்பட்டது (அப். 2:4, 17; 10:45). மக்களைத் தண்ணீரில் அடக்கம் செய்து, தண்ணீரில் இருந்து அவர்களை வெளியே கொண்டு வருதல் என்பதன் மூலம் (அப். 8:38, 39; ரோமர் 6:4; கொலோ. 2:12) தண்ணீர் ஞானஸ்நானம் என்பது மனிதக் கரங்களால் தரப்பட்டது.

*4. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானமும் தண்ணீர் ஞானஸ் நானமும் யாருடைய நாமத்தினாலே தரப்பட்டன?*

பிதாவானவர் பரிசுத்த ஆவியானவரை இயேசுவின் அதிகாரம் என்று அர்த்தம் கொள்ளும் இயேசுவின் நாமத்திலே அனுப்புவார் என்று இயேசு கூறினார் (யோவா. 14:26). "பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில்" ஞானஸ்நானம் தர வேண்டும் என்று இயேசு தமது பின்பற்றாளர்களுக்கு அறிவுறுத்தினார் (மத். 28:19). இவ்விதம் செய்வதினால் அவர்கள் இயேசுவின் அதிகாரத்தின்படி அவருடைய நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தனர்.

*5. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெறுவதற்கும் தண்ணீர் ஞானஸ்நானத்தைப் பெறுவதற்கும் தேவையாயிருந்த தகுதிகள் யாவை?*

பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெறும் முன்பு அப்போஸ்தலர்கள் எருசலேமில் தங்கியிருக்கும்படி கேட்டுக் கொள்ளப் பட்டனர் (அப். 1:4, 5). அப்படிப்பட்ட செயல் எதுவும் கொர்நேலியு அல்லது அவரது குடும்பத்தார் மற்றும் நண்பர்கள் ஆகியோரிடம் கேட்கப்படவில்லை. அவர்களின் பகுதியில் தகுதிப்படுத்தும் செயல் எதையும் கேட்டுக் கொள்ளாமலேயே தேவன் ஆவியானவரை அவர்கள் மீது நேரடியாகப் பொழிந்தருளினார்.

தண்ணீர் ஞானஸ்நானம் பெறுவதற்கு, நாம் தேவனுடைய வசனத்தைக் கேட்டு (அப். 8:12; 18:8), இயேசுவில் விசுவாசம் கொண்டு (மாற். 16:16), மனந்திரும்பி (அப். 2:38), மற்றும் இயேசுவில் நாம் கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கையிட வேண்டும் (ரோமர் 10:9, 10). இவைகளைச் செய்துள்ளவர்களுக்குக் காத்திருத்தல் எதுவும் தேவைப் படுவதில்லை (அப். 2:41; 8:12, 35-39: 16:33; 22:16; 9:18ஐக் காணவும்).

*6. இந்த ஞானஸ்நானங்கள் எந்த அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டன?*

பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் என்பது ஒரு வாக்குத்தத்தம் என்ற வகையில் பெற்றுக் கொள்ளப்பட்டது (அப். 1:4, 5). தண்ணீர் ஞானஸ்நானம் என்பது ஒரு கட்டளை என்ற வகையில் கீழ்ப்படிய வேண்டியதாக உள்ளது (அப். 10:48). ஒரு ஞானஸ்நானம் என்பது கட்டளையிடப்பட்டு அல்லது ஒரு கட்டளை என்ற வகையில் பெற்றுக்

கொள்ளப்பட்ட பொழுதெல்லாம் அது தண்ணீர் ஞானஸ்நானமாகவே இருக்க வேண்டும். தண்ணீர் ஞானஸ்நானத்தைப் பெறுதல் என்பது நாம் இயேசுவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிதலைச் சார்ந்துள்ளது. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் என்பது இயேசுவைச் சார்ந்ததாக இருந்தது. இந்த ஞானஸ்நானத்தை இயேசு நமக்குக் கொடுப்பதில்லை என்றால், அது நமது தவறாக இருப்பதில்லை; மாறாக, அது அவருடைய தெரிவாக உள்ளது. நமது செயல்பாடுகள் நமக்குப் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைத் தர முடியாது.

*7. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்றது யார்? தண்ணீர் ஞானஸ்நானத்தைப் பெற்றது யார்?*

பெந்தெகொஸ்தே பண்டிகையின் போது இயேசு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியானவரை (அப். 1:1-8) அப்போஸ்தலர் களுக்குக் கொடுத்தார் (அப். 1:26-2:6, 14, 37). (பிற்பாடு, இந்த நிகழ்வானது "ஆதியிலே" என்று கூறப்பட்டது; அப். 11:15.) அவர் கொர்நேலியுவின் வீட்டாரையும் பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானப்படுத்தினார் (அப். 11:15-18; 10:24ஐக் காணவும்). வேதாகமத்தில் இந்த இரு இடங்களில் மட்டுமே பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் பதிவு செய்யப் பட்டுள்ளது.

புற ஜாதியார், பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் பெற்றதைப் பேதுரு கண்ட பொழுது அவர், "பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினது போலவே, அவர்கள் மேலும் இறங்கினார்" (அப். 11:15) என்று கூறிய உண்மையின் மீது தனிச் சிறப்பான கவனம் வைக்கப்பட வேண்டும். அவர் புதுக் கிறிஸ்தவர்கள் எல்லார் மீதும் அருளப்பட்டது போலவே, அவர்கள் (கொர்நேலியு வீட்டார்) மீதும் ஆவியானவர் அருளப்பட்டார் என்று கூறவில்லை. அவர், ஆதியில் (தொடக்கத்தில்) அப்போஸ்தலர்கள் பெற்றிருந்த பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைக் குறிப்பிட்டார் (அப். 2:4).

இக்கருத்துடன் ஒப்புதல் கொண்ட வகையில் ஃபிரெடெரிக் டேல் ப்ரூனர் அவர்கள், பேதுருவின் கூற்றைப் பற்றிப் பின்வருமாறு எழுதினார்:

> அவர், பரிசுத்த ஆவியானவர் "ஆதியிலே நம்மேல் இறங்கினது போலவே" (வ. 15) கொர்நேலியு வீட்டார் மேலும் இறங்கியதாக வலியுறுத்தினார். இந்தக் குறிப்பு இன்றிமையாததாக உள்ளது. பரிசுத்த ஆவியானவர் "எப்பொழுதும் ஒவ்வொருவருக்கும் செய்கின்றது போலவே" கொர்நேலியுவின் வீட்டார் மேலும் இறங்கி வந்ததாகப் பேதுரு கூறுவதில்லை. பேதுரு அவ்வாறு கூறியிருந்தால், நாம் ஆதி சபையில் பரிசுத்த ஆவியானவர் எப்பொழுதுமே அல்லது குறைந்த பட்சம், பாஷைகளைப் பேசும் பொழுதாவது அருளப்பட்டிருப்பார் என்று நாம் யூகிக்கலாம். ஆனால் செசரியாவில் நடைபெற்றதற்கு இணையான நிகழ்ச்சியாகப் பேதுரு அறிந்துள்ள ஒன்றே ஒன்று என்ற வகையில் "ஆதியிலே" நடைபெற்ற நிகழ்ச்சிதான் இருந்தது என்பது, பெந்தெகொஸ்தே நாளின் வெளிப்பாடுகள் பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிறகு குறித்த நிலைக்குக் கொண்டு வருதல் சார்ந்ததாக

இருந்ததில்லை என்பதுடன் அவை அநேகமாக அறியப்பட்டிருந்ததும் இல்லை.[1]

இந்த நிகழ்ச்சியைப் பற்றிப் பேதுரு பிற்பாடு, "நீங்கள் அறிந்திருக்கிற படி புறஜாதியார் என்னுடைய வாயினாலே சுவிசேஷ வசனத்தைக் கேட்டு விசுவாசிக்கும்படி தேவன் அநேக நாட்களுக்கு முன்னே உங்களில் ஒருவனாகிய என்னைத் தெரிந்து கொண்டார். இருதயங்களை அறிந்திருக்கிற தேவன் நமக்குப் பரிசுத்த ஆவியைத் தந்தருளினது போல அவர்களுக்கும் தந்தருளி, அவர்களைக் குறித்து சாட்சி கொடுத்தார்" (அப். 15:7, 8) என்று சுட்டிக்காட்டியதன் மூலம் குறிப்பிட்டார். புற ஜாதியார் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று எருசலேமிலிருந்த சகோதரர்களை இணங்க வைப்பதற்காகப் பேதுரு, ஆவியானவர் வருதல் என்பது புற ஜாதியார் மீது தொடர்ந்து நடந்த செயல்பாடாகும் என்று உரைக்கவில்லை. அதற்குப் பதிலாக, கொர்நேலியுவின் வீட்டாரும் நண்பர்களும் பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானம் பெற்ற அந்த ஒரே முறை நிகழ்ச்சியைக் குறிப்பிடுதல் அவசியமானது என்று அவர் கண்டார். இந்தக் காரணங்களினால், பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் என்பது ஒரு தொடர் நிகழ்ச்சியல்ல ஆனால் மாறுபட்ட இரண்டு வேளைகளில் மட்டுமே நடந்த நிகழ்ச்சியாகும் என்று தான் முடிவெடுக்கப்பட வேண்டும்: பெந்தெகொஸ்தே நாளன்று அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானம் பெற்ற நிகழ்ச்சி மற்றும் புற ஜாதியாருக்கு இரட்சிப்பின் கதவு திறக்கப்பட்ட நிகழ்ச்சி. (ஒருவேளை, பவுல் மகாபிரதான அப்போஸ்தலர்களுக்கு எவ்விதத்திலும் குறைந்தவராயிராதபடிக்கு மூன்றாவது நிகழ்ச்சியாக ஒன்று இருந்திருக்கலாம்; 2 கொரி. 12:11, 12.)

எல்லா இனத்தைச் சேர்ந்த மக்களுக்கும் தண்ணீர் ஞானஸ்நானம் தரப்பட்டது. அப். 2:41; 8:12, 13, 38; 9:18; 10:48; 16:15, 33; 18:8; 19:5; 22:16 ஆகிய வசனங்களை வாசிக்கவும். இந்நிகழ்ச்சிகள் யாவற்றிலும் ஞானஸ்நானம் பெற்றவர்கள் ஒரு மனிதரால் ஞானஸ்நானம் பெற்றனர் மற்றும்/அல்லது ஒரு கட்டளைக்குக் கீழ்ப்படிந்தனர் என்ற உண்மை காணப்படும் வகையில், இவை தண்ணீர் ஞானஸ்நானம் நடைபெற்ற நிகழ்ச்சிகளே என்பது தெளிவு. மற்ற நிகழ்ச்சிகள் நிருபங்களில் காணப் படுகின்றன (ரோமர் 6:3, 4; 1 கொரி. 1:13-16; கலா. 3:27; எபே. 4:5; கொலோ. 2:12; 1 பேது. 3:21).

8. பரிசுத்த ஆவியானருடைய ஞானஸ்நானத்தின் நோக்கம் என்ன, மற்றும் தண்ணீர் ஞானஸ்நானத்தின் நோக்கம் என்ன?

அப்போஸ்தலர்களுக்கு வல்லமை அளித்து (அப். 1:8), வசனத்தை உறுதிப்படுத்தி (மாற். 16:20; எபி. 2:3, 4) மற்றும் இயேசுவின் வசனங்களை வெளிப்படுத்துதல் (யோவா. 14:26; 16:13) என்பதே பரிசுத்த ஆவியான வருடைய ஞானஸ்நானத்தின் நோக்கமாய் இருந்தது. இது அப்போஸ்தலர் களை இயேசுவின் சிறப்புப் பிரதிநிதிகள் என்ற வகையில் தயாரித்தது, ஏனெனில் இது தனிச்சிறப்பான அடையாளங்களுடன் அவர்கள் தங்கள் பணிப் பொறுப்பை உறுதிப்படுத்த அவர்களுக்கு வல்லமையளித்தது

*(2 கொரி. 12:12). புற ஜாதியாரும் கூட இரட்சிப்பின் சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டு முதல் தரக் கிறிஸ்தவராக மதிக்கப்பட முடியும் என்று யூதக் கிறிஸ்தவர்களுக்கு நிரூபிப்பதற்காக புற ஜாதியாரின் விஷயத்தில், இந்த ஞானஸ்நானத்தைத் தேவன் பயன்படுத்தினார் (அப். 10:47; 11:17; 15:7, 8).*

*தேவன் பாவங்களை மன்னித்து (அப். 2:38; கொலோ. 2:12, 13), பாவங்களைக் கழுவி (அப். 22:16), மற்றும் பாவங்களில் இருந்து இரட்சிக்கும் (மாற். 16:16; 1 பேது. 3:21) முன்பு தண்ணீர் ஞானஸ்நானத்தைப் பாவிகள் விசுவாசத்தினால் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது ஒரு நிபந்தனையாக உள்ளது.*

*9. இந்த இரு ஞானஸ்நானங்களைப் பின் தொடர்ந்த விளைவுகள் யாவை?*

*பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தின் மூலம், அப்போஸ்தலர்கள் அற்புதங்களை நிகழ்த்தினார்கள், மற்றும் நேரடியாகத் தேவனுடைய வசனத்தைப் பெற்றார்கள் (எபே. 3:3-5). புற ஜாதியார் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொண்டதால், அவர்கள் இரட்சிக்கப்படும்படிக்கு (மாற். 16:16ஐக் காணவும்) அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப் பேதுரு மனதாயிருந்தார் (அப். 10:47). புற ஜாதியிலிருந்து மனம் மாறியவர்கள் தேவனுக்கு ஏற்புடையவர்கள் என்றும், யூதக் கிறிஸ்தவர்களின் ஐக்கியத்திற்குத் தகுதியானவர்கள் என்றும் ஏற்றுக் கொள்ளும்படி யூதக் கிறிஸ்தவர்கள் வற்புறுத்தப்பட்டார்கள் (அப். 11:17, 18).*

*தண்ணீர் ஞானஸ்நானமானது பாவமன்னிப்பு (அப். 2:38), புது வாழ்வு (ரோமர் 6:4), மற்றும் கிறிஸ்துவின் சபையான (எபே. 1:22, 23) ஒரே சரீரத்தில் உறுப்பினராகுதல் (1 கொரி. 12:13) ஆகியவற்றை விளைவித்தது.*

*10. இரு ஞானஸ்நானத்தையும் உடனடியாகப் பின் தொடர்ந்த செயல்பாடுகள் யாவை?*

*பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்றவர்கள் பற்பல மொழிகளைப் பேசினார்கள் (அப். 2:4; 10:45, 46). தண்ணீரினால் ஞானஸ்நானம் பெற்றவர்கள் அகம் மகிழ்ந்தார்கள் (அப். 8:39; 16:33, 34).*

*இரு ஞானஸ்நானங்களையும் மீண்டும் பார்வையிட்டதில் நாம், இன்றைய நாட்களில் எல்லா மக்களுக்கும் தொடர்ந்து பயன்படுத்தப்படக் கூடிய ஞானஸ்நானம் எது என்பதைக் காண முடிகின்றது. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் என்பது வரையறைக்குட்பட்ட மக்கள் குழுவிற்குரியதாக மட்டும் இருந்திருக்கையில், தண்ணீர் ஞானஸ்நானம் என்பது எல்லா இனத்தவருக்கும் எல்லாக் காலத்திற்கும் உரியதாகும். இரட்சிக்கப்பட விரும்புகின்ற எல்லாப் பாவிகளின் தேவைகளையும் தண்ணீர் ஞானஸ்நானமானது நிறைவேற்றுகின்றது. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் அப்போஸ்தலர்களுக்குக் கிறிஸ்துவின் வசனத்தை உறுதிப்படுத்தி மற்றும் வெளிப்படுத்தியுள்ளது. அவர்கள் அவற்றை நமக்காகப் புதிய ஏற்பாட்டில் பாதுகாத்துள்ளனர். புற ஜாதியார் பற்றிய பதிவு செய்யப்பட்ட விபரமானது, புற இனத்தவராய் உள்ள நாம், கிறிஸ்துவின் மூலம் இரட்சிப்படைய முடியும் என்பதற்கும், கிறிஸ்தவர்களான யூதர்களின் அதே அளவில் நாமும் ஏற்றுக் கொள்ளப்பட முடியும்*

என்பதற்கும் சான்றாகப் பயன்படுகின்றது.

## தொகுப்புரை

பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் என்பது அப்போஸ்தலர்களை அவர்களின் மாபெரும் ஊழியத்திற்கென்று தயாரிக்கவும், புற ஜாதியாருக்கு (இரட்சிப்பின்) கதவைத் திறக்கவும் தேவனுடைய நோக்கத்தில் பயன்பட்டது. அந்த நோக்கங்கள் நிறைவேறிவிட்டதால், பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் தனது பணியை முடித்துள்ளது மற்றும் இவ்விதமாக அது முடிவடைந்துள்ளது. தண்ணீர் ஞானஸ்நானம் என்பது இன்னமும் எல்லா இனத்தவருக்கும் தேவைப்படுகின்றது, எனவே இயேசுவின் இரத்தத்தின் மூலம் இரட்சிப்பை நாடும் அனைவருக்கும் இது தொடருகின்றது.

குறிப்பு

[1]Frederick Dale Bruner, *A Theology of the Holy Spirit: The Pentecostal Experience and the New Testament Witness* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1970), 194.

---

## அடக்கம் பண்ணப்பட்டு உயிர்ப்பிக்கப்படுதல் (ரோமர் 6:4)

ஞானஸ்நானத்தில் இயேசுவுடன் அடக்கம் பண்ணப்பட்டு உயிர்ப்பிக்கப்படுதலின் உணர்த்தும் கருத்துக்கள் என்ன? நாம் தண்ணீருக்குள் முழுக்கப்பட்டு பிறகு தண்ணீரில் இருந்து எழும்புகின்ற பொழுது ஞானஸ்நானம் என்ற செயல்பாடானது முழுமையடைகின்றது. எவரெட் F. ஹாரிஸன் அவர்களால் எடுத்துரைக்கப்பட்ட பின்வரும் விளக்கவுரையைப் பெரும்பாலான எழுத்தாளர்கள் ஒப்புக் கொள்ளுகின்றனர்: "இருப்பினும், ஒரு கணநேரத்திற்கு உடலானது ஞானஸ்நானத் தண்ணீரில் மூழ்கியிருக்கையில் கிறிஸ்துவுடன் அடக்கம் பண்ணப் படுத்தலையே பவுல் சித்தரிக்கின்றார் (ரோமர் 6) என்பது உறுதி."[1]

குறிப்பு

[1]Everett F. Harrison, *The Expositor's Bible Commentary*, vol. 10, Romans - Galatians, gen. ed. Frank E. Gaebelein (Grand Rapids. Mich.: Zondervan Publishing House, 1976), 69.